பக்கங்கள் எட்டு

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 15 வியாழக்கிழமை (31-10-1996) UTHAYAN A Lively Nationel Tamil Daily கதிர் 257

# யாழ். மனித உரிமை மீறல் குறித்து கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி!

## மாணவி கிருஷாந்தி கொலைவிவகாரம் தெற்கிலும் முக்கிய இடம் பிடிக்கிறது

கொழும்பு; ஒக்ரோபர் 31

வடக்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து ஸ்ரீலங்காவில் உள்ள மனித உரிமைகள் அமைப்புக்கள் பல ஒன்று கூடி நேற்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தின.

வடக்கில் கற்பழிப்பு, படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இராணுவத்தினருக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்திய இந்த அமைப்புகள், அங்கு இடம்பெற்றுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கண்டறிய தங்களுக்கு வாய்ப்பளிக்குமாறும் கோரியுள்ளன.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, கற்பழிக்கப்பட்டு, கொல்லப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் கொல்லப்பட்ட அவரது தாயார், சகோதரர், அயலவர் ஆகியோர் விடயம் குறித்து விரைவில் சட்ட நடவடிக்கை எடுத்து குற்றம் புரிந்தோரை தண்டிக்க வேண்டும் என்பதும் —

யாழ்ப்பாணத்தில் தற்போது இடம் பெறுவதாகக் கூறப்படும் ஆள்கள் காணா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் தூதுவர் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஒக். 31

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதர் டி. ஈ. ராட்ஹாம் இன்று யாழ்ப்பாணத்திற்கு ஒருநாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ள விருக்கிறார்.

இன்று காலை விமானம் மூலம் பலாலி வந்து சேரும் அவர் முதலில் காங்கேசன் துறை துறைமுகத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்வார்.

அதன் பின் சுன்னாகத்தில் உள்ள மின்நிலையத்துக்குச் செல்வார். அங்கு சேதமடைந்த மின்சார நிலையத்தைப் பார்வையிடுவார். அந்த மின் நிலையத்தை திருத்துவது தொடர்பாக ஆராய்வார்.

பின்பு அவர் யாழ் ஆஸ்பத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பயிலுநர் ஆசிரியர் சம்பளம் 2,500 ரூபாவாக அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 31

பயிலுநர் ஆசிரியர்களுக்கு பயிற்சிக்காலத்தில் வழங்கப்படும் வேதனத்தை ஆயிரத்து 850 ரூபாவிலிருந்து இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகக் கல்வி அமைச்சர் ரிச்சர்ட்பத்திரான தெரிவித்தார்.

வேதன அதிகரிப்பு, தொழில் நிரந்தரமாக்கப்படுதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து பயிலுநர் ஆசிரியர் கொழும்பில் உண்ணாவிரதப்போராட்டத்தில் குதித்தனர் என்பது தெரிந்ததே.

அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ, இரத்தினபுரி மாவட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பகிஷ்கரிப்பு தீவிரம்!

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். மாவட்ட மாணவர்களின் பாடசாலை பகிஷ்கரிப்பு நடவடிக்கை நேற்று மூன்றாம் நாளாகத் தீவிரமாக இடம்பெற்றது.

யாழ். நகர்ப்புறம் மட்டுமல்லாமல் வடமராட்சி போன்ற பகுதிகளுக்கும் பகிஷ்கரிப்பு நடவடிக்கை விஸ்தரிக்கப்பட்டது.

பாடசாலை பகிஷ்கரிப்பின் கடைசி நாள்களான இன்றும் நாளையும் குடாநாட்டு மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமது உணர்வை வெளிப்படுத்துவர் என மாணவர் பிரதிநிதி ஒருவர் 'உதயன்' செய்தியாளரிடம் நம்பிக்கை வெளியிட்டார்.

...லைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் தமது வகுப்புகளைப் பகிஷ்கரித்து ஒத்துழைப்பர் என்றும் —

இந்தப் போராட்டத்தின் கடைசித் தினமான நாளை, அரச ஊழியர்கள் தமது அலுவலகங்களுக்குச் செல்லாமல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கரவெட்டியில் நேற்று தோண்டப்பட்ட புதைகுழியில் சடலம் ஏதும் இல்லை

### ஆனால் மண்ணில் துர்நாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 31

மரணமானதாகக் கூறப்படும் ஒருவரின் புதைகுழி கரவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் தோண்டப்பட்டது.

எனினும் அங்கு சடலம் எதுவும் எடுக்கப்படவில்லை. புதை குழியிலிருந்து சகிக்க முடியாத துர்நாற்றம் வீசியது. அதனால் புதைகுழியிலிருந்து மண் மிகப் பக்குவமாக எடுத்துவரப்பட்டு, மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

இந்த மண்ணில் வீசும் துர்நாற்றம் அப்பகுதியில் சடலம் ஏதேனும் சில காலம் புதைக்கப்பட்டு பின்பு அகற்றப்பட்டதால் ஏற்பட்டதாக இருக்கும் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இதனால் இந்த மண் குறித்து மேலதிக பரிசோதனை நடத்துவதற்காக அது கொழும்புக்கு— அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு — அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தலை கீழாகக் கட்டி அடித்த போது வாயாலும் மூக்காலும் இரத்தம் வந்தது

### விசாரணையின் போது சாட்சியம்

யாழ்ப்பாணம், ஒக். 31

''முரளிதரனைத் தலைகீழாகக் கட்டி, எல். ரி. ரி. யா? என்று கேட்டவாறே நான்கு இராணுவத்தினர் சேர்ந்து பொல்லால் அடித்தனர். அவரின் வாயாலும் மூக்காலும் இரத்தம் வெளியேறியது.''

பின்னர் முரளிதரனை அவிழ்த்துவிட்டு அவருக்கு மேல் ஏறி கால்களால் மிதித்தனர். அடித்தபோது அவர் குளறினார். கா... மிதித்தபோது ... வெளிவரவில்லை.

—இவ்வாறு மந்திகை ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி திரு. வி. நடராசா ஜே. பி. முன்னிலையில் நேற்றுச் சாட்சியமளிக்கையில் சுந்தரலிங்கம் சுபதாஸ் என்பவர் தெரிவித்தார்.

...

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சரம்

### மாணவர் அமைப்பால் பஸ் எரிப்பு!

யாழ்ப்பாணம், ஒக் 31

யாழ். பஸ் நிலையத்தில் புதிய பஸ் ஒன்று நேற்று முன்தினம் எரிந்த சம்பவத்துக்கு ''யாழ். மாவட்ட மாணவர் சங்கம்'' என்ற அமைப்பு உரிமை கோரியிருக்கின்றது.

''ரஜினி, மாணவி கிருஷாந்தி, மாணவன் பிரணவன் போன்றோரின் படுகொலைகளைக் கண்டித்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஜே. ஆர். தொடர்ந்து சுகயீனம்

கொழும்பு, ஒக் 31

இருதய நோய்காரணமாக இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் உள்ள தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் (வயது 90) உடல் நிலை இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. அவர் தொடர்ந்து கடும் சுகயீன முற நிலையிலேயே உள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வலிகாமம் மேற்கில் ஊரடங்கு

பலாலி, ஒக். 31

கடந்த 29 ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை வலிகாமம் மேற்குப்பகுதியில் மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என பலாலி வானொலி அறிவித்தது.

(உ-3)

### கட்டைக்காட்டில் சிப்பாய் பலி!

கொழும்பு, ஒக். 31

கட்டைக் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

(உ-4)

### அலம்பிலில் குண்டு வீச்சு!

கொழும்பு, ஒக். 31

வட- கிழக்கு கரையோரப் பகுதியான அலம்பிலில் உள்ள கடற்புலிகளின் மறைவிடத் தளங்கள் மீது விமானப்படையின் ''கிபிர்'' ஜெட் விமானங்கள் நேற்று குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது. சேத விவரங்கள் தெரியவரவில்லை.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாற்பத்தைந்தாம் நாளின் அழியா நினைவுக்கோலம்



கைதடி நுணாவில்

### செல்வி பரமேஸ்வரி தம்பையா

(உஷா)

(யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பொருளியற்றுறை இறுதியாண்டு மாணவி)

வையகத்தில்: 1969 – 04 – 06

சுவர்க்கத்தில்: 1996 – 09 – 17

காலத்தில் கார்த்திகையாய் மலர்ந்தவளே!
ஞாலத்தில் 'உஷா' வென உதித்திட்டாயே!
கோலத்தில் கோதை முகம் கொண்டவளே!
இல்லத்தில் அன்ரா என அழைத்தோமே
கழகத்தில் பட்டம் பெறவந்தாயே
பழக்கத்தில் இதயங்களைக் கவர்ந்தவளே
உள்ளத்தில் அன்புமலர் கொண்டவளே
விண்ணகத்தில் கூற்றுவனும் கண்வைத்தானோ?
நடமாடும் அன்புக்களஞ்சியமே
அன்ராவே! உன்றன் பாசத்து வேர்கள்
பசுந்தளிர்களாக எம் நெஞ்சத்தைக் கிள்ளுதையோ!
வாடாத மலராக நாமும்வாடுகின்றோம் அன்ராவே!

பெறாமக்கள் ஜெகன், விந்தன்
மருமகன் தேவன் (மட்டுவில்)
உடன் பிறவா சகோதரர்கள் சாம்சன்,
துசாந்தன், பிரதீபன்.

கோண்டாமலை லேன்,
கொக்குவில் கிழக்கு

(43422)

---

ஏக அகவை

## நிறைவு நினைவலை



தாயின் மடியில்: 22 – 06 – 1939

இறைவன் அடியில்: 11 – 11 – 1995

### திருவாட்டி சிவஞானம் நல்லம்மா

திதி: 31 - 10 - 96

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய் என்றும் எங்கள் வழிகாட்டியாய் வாழ்ந்திட்ட அன்புமிகு தாயே! எங்களை விட்டுப்பிரிந்து ஆண்டொன்று சென்றுவிட்ட போதிலும் என்றும் உங்கள் நினைவலைகள் எங்கள் அகத்தை விட்டு நீங்காது. உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளை.

தகவல்:
திரு திருவாட்டி திருச்செல்வம்,
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(சி-3380)

---

## ரெலோ அறிக்கை

கொழும்பு, ஒக். 31

பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த ஒரு சில மாதங்களாக நிகழ்த்தப்பட்டிருக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இப்போது வெளி உலகுக்குத் தெளிவாகத் தெரிய வரத் தொடங்கியுள்ளன.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் சில நாள்களுக்கு முன்பு வரை நடைமுறைப்படுத்தப் பட்ட செய்தித் தணிக்கையின் பின்னால் குடாநாட்டில் நிகழ்ந்திருக்கும் அட்கிரமங்களும், அநீதிகளும் அம்பலத்துக்கு வர ஆரம்பித்துள்ளன.

ரெலோ இயக்க முதல்வர் என். ஸ்ரீகாந்தா மேற்கண்டவாறு தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

(இ-3)

## ஒக்ரோபர் ஒய்வூதியம் இதுவரை இல்லை

யாழ்ப்பாணம், ஒக் 31

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் ஒக்ரோபர் மாதத்துக்கான ஓய்வூதியம் இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தமது ஓய்வூதியம் கிடைக்க உதவுமாறு யாழ். அரச அதிபரை அவர்கள் கோருகின்றனர்.

(இ-3)

## சட்டத்தரணிகள் நாலிவர் மீது வழக்கு?

கொழும்பு, ஒக். 31

காணி உறுதிகளில் ஒட்டப்பட்டிருந்த சுமார் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள் களவாடப்பட்டது தொடர்பாக கொழும்பு அளுத்கடை நீதிமன்றங்களில் பணியாற்றும் நான்கு சட்டத்தரணிகளுக்கு எதிராக கொழும்பு குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவு வழக்குத் தொடரவுள்ளது என 'லங்காதீப' நாளிதழ் தெரிவிக்கிறது.

வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பான ஆவணங்கள் ஏற்கனவே சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப் பட்டுள்ளதாகவும்—

சந்தேக நபர்களான 4 சட்டத்தரணிகளில் ஒருவர் பெண் எனவும்—

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

(உ-10)

---

## NOTICE

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### FACULTY OF MEDICINE

Commencement of Lectures

The Lectures for following batch of students will commence on the dates given against the batch.

1. **1995** batch (New Admissions) **20-01-1997**
2. **1991** batch and the N L M C. students who have registered with University of Jaffna in August **1995** (3rd MBBS Course) **06 - 01 - 1997**

REGISTRAR

1996-10-25 (C/3381)

---

## மரண அறிவித்தல்கள்

செல்வன்

### பாலசுப்பிரமணியம் செல்வகுமார்

(கொக்குவில் நாமகள் வித்தியாலய மாணவன்)

வளாக ஒழுங்கை திருநெல்வேலியைச் சேர்ந்த செல்வன் பாலசுப்பிரமணியம் செல்வகுமார் 26-10-96 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரை பாலசுப்பிரமணியம், திருமதி பா. நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், திருமதி உ. செல்வராணி, சுகந்தி, பாலகுமார், ஷாமினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், உதயகுமாரின் அன்பு மைத்துனரும், நிரோஜன், நிவேதிகா, விதுஷன், யதுஷன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26 – 10 – 96 இல் (சனிக்கிழமை) கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
பா. பாலகுமார்
(சகோதரன்)

(43412)

### நாகலிங்கம் சண்முகநாதன்

(யாழ் வாணன்)

(Formerly Chief care -taker Municipal Council Jaffna)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தம்பதிகளின் புதல்வராகிய சண்முகநாதன் கடந்த 5 - 10 - 1996 அன்று இந்தியாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் தபோநிதியின் அன்புக்கணவரும், சுதாகர், ராஜன், சுரேஸ், யாழினி, கண்ணதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற குமரகுரு (கணக்காய்வுத் திணைக்களம்), அருளானந்தம் (குடிவரவு, குடி அகல்வுத் திணைக்களம்), சிவசோதி (அரச மரக்கூட்டுத்தாபனம், சிம்மயானந்தம் (மத்திய வங்கி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்றைய தினம் இந்தியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
க. சிவசோதி
(மைத்துனர்)

'பத்மபவனம்'
வதிரிச்சந்தி, கரவெட்டி.

(43413)

### நவரத்தினம் கலைச்செல்வன்

(யா/ மங்கையர்க்கரசி வித்தியாலய மாணவன்)

கொண்டலடிலேன், நல்லூரைச் சேர்ந்த நவரத்தினம் கலைச்செல்வன் 29 - 10 - 96 இல் அகால மரணம் அடைந்தார்.

அன்னார் நவரத்தினம்– (யாழ் மாநகரசபை) பத்துமாவதி தம்பதிகளின் அன்பு மகனும், தமிழ்ச்செல்வன், அருட்செல்வன் ஞானச்செல்வன், சிந்துஜா ஆகியோரின் சகோதரனும், மார்க்கண்டு, கந்தையா ஆகியோரின் பேரனும், கந்தசாமி (விற்பனைத் திணைக்களம்), தேவராசா (யா/ மாநகரசபை நீர்வேலைப்பகுதி) ஆகியோரின் பெறாமகனும், நித்தியானந்த தேவியின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:-
மா. நவரத்தினம்

இல. 28/5 கொண்டலடி லேன்,
நல்லூர்.

(43415)

### சின்னத்தம்பு சரவணமுத்து

கோல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், கருகம்பனையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது வல்லை வீதி, சங்கானையில் வசித்துவந்தவருமாகிய சின்னத்தம்பு சரவணமுத்து 30- 10- 96 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், கந்தசாமி (சிமெந்துத் தொழிற்சாலை, காங்கேசன்துறை), சிவபாதம், பாலசுப்பிரமணியம், பாலசிங்கம் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), சிவமலர், நேசமலர், சிறிஸ்கந்தராசா, (சவூதி), றதிமலர் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலாம்பாள் (ஆசிரியை, புன்னாலைக்கட்டுவன் V. T. M. S), பவலேஸ்வரி, புஸ்பராணி (ஆசிரியை, கீரிமலை நகுலேஸ்வரா ம. வி), அஷ்டலக்சுமி (வவுனியா), சிவராசா, சிவபாலன் (நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார்), செல்வகுமார் (வியாபாரம், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பொன்னுப்பிள்ளை, இரத்தினம், செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், மீனலோஜினி (கனடா) கஜயரூபன், சித்திரா, கார்த்திகா, ரூபிகா, கம்சா, துசிபா, லோகிதா, சங்கீதா, ஜனகன், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-10-96) வியாழக்கிழமைநண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ச. பாலசுப்பிரமணியம்
(மகன்)

வல்லை வீதி,
சங்கானை.

(43418)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைதீர்வில் 3 ஆம் தரப்பு தலையீடு எப்பொழுது சாத்தியம்?

## 'புரொன்ட்லைன்'னுக்கு ஜனாதிபதி அளித்த பேட்டியின் பின்னணி என்ன?

''மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை புலிகள் கேட்டால் அரசாங்கம் அதனைப் பரிசீலிக்கும்'' என்று 'புரொன்டலைன்' பத்திரிகைக்கு ஜனாதிபதி பேட்டி யளித்திருந்தார்.

அப்பேட்டி வெளியானதும் அரசாங்கம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுக்கு தயாராகிவிட்டது. பேச்சுவார்த்தைக் கதவு திறக்கப்பட்டுவிட்டது என்று ஒருசாரார் கூறினார்கள்.

இன்னொரு சாரார், புலிகள் இயக்கத்தினரின் தாக்குதல்கள் காரணமாக அரசாங்கம் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது. எனவே தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் என்றனர்.

ஆனால், உண்மைநிலைவரம் மேற்குறிப்பிட்ட இரு சாராரின் கருத்துக்கும் அப்பாற்பட்டது; அதாவது நேர் மாறானது.

கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிக்க முன்னர் பூவா, தலையா போட்டுப்பார்ப்பார்கள். அதனை வைத்துத் தான் யார் 'பேட்டிங்' யார் 'போலிங்' என்று தீர்மானிக்கப்படும்.

### ராம் மாணிக்கலிங்கம் பேட்டி கண்டது ஏன்?

'புரொன்ட்லைன்'' சஞ்சிகைக்கு ஜனாதிபதி அளித்த பேட்டியும் அப்படித்தான்.

'புரொன்ட்லைன்' தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் ஆங்கில சஞ்சிகை. அதன் ஆசிரியர் என். ராம்.

'புரொன்ட்லைன்' சார்பாக ஜனாதிபதியைப் பேட்டி கண்டவர் ராம் மாணிக்கலிங்கம். இவர் இலங்கையைச் சேர்ந்தவர். ஆனால் 'புரொன்ட்லைன்' செய்தியாளர் அல்லர்.

'புரொன்ட்லைன்' ஆசிரியர் என். ராமும், ராம் மாணிக்கலிங்கமும் நண்பர்கள்.

என். ராம் ஒரு காலத்தில் புலிகளை வெகு தீவிரமாக ஆதரித்தவர். ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் புலிகளை வெகு தீவிரமாக எதிர்த்து வருகிறார் ராம்.

ராம் மாணிக்கலிங்கம் ஜனாதிபதியுடன் அரசியல் ரீதியாக நெருக்கமானவர். புலிகள் இயக்கம் தொடர்பாக எதிரான அபிப்பிராயம் உடையவர்.

புலிகள் மற்றும் தமிழ்க் கட்சிகள் என்பவற்றுக்கு புறம்பான மூன்றாவது சக்தியொன்றை தமிழ் மக்களிடம் உருவாக்க முடியும் என்று அரசாங்கம் நம்பிக்கை கொண்டமைக்கு காரணகர்த்தாக்களில் ஒருவர் ராம் மாணிக்கலிங்கம்.

அவர்தான் ஜனாதிபதியைப் 'புரொன்ட்லைன்' சார்பாக பேட்டி கண்டுள்ளார்.

பொதுமக்கள் முன்னணி அரசாங்கம் தொடர்பாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருக்கக்கூடிய தப்பான அபிப்பிராயங்களைப் போக்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே அப்பேட்டியை ராம் மாணிக்கலிங்கம் ஏற்பாடு செய்தது போலத் தெரிகிறது. தொடுக்கப்பட்ட கேள்விகளும் அவ்வாறுதான் இருக்கின்றன.

''புரொன்ட்லைன்'' சஞ்சிகையின் செய்தியாளர் ஒருவரே ஜனாதிபதியைப் பேட்டி கண்டிருக்க முடியும். வேண்டுமானால் அதற்கான ஏற்பாட்டை செய்துவிட்டு ராம் மாணிக்கலிங்கம் ஒதுங்கியிருந்திருக்கலாம்.

ஆனால் ராம் மாணிக்கலிங்கம் தானே நேரடியாக இறங்கி அடித்தாடக்கூடிய பந்துகளாகப் போட்டுக் கொடுக்க ஜனாதிபதியும் பவுண்டரி, சிக்ஸர் என்று விளாசியிருக்கிறார்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பான கேள்வியைக்கூட புலிகள் தாமாகவே விரும்பிக்கேட்டால் அரசாங்கம் எவ்வாறு நடந்து கொள்ளும் என்ற ரீதியில் தான் எழுப்பியுள்ளார்.

அக்கேள்வியை வேறு ஒரு முறையிலும் கேட்டிருக்கலாம்.

> கொழும்பிலிருந்து வெளியாகும் ''தினமுரசு'' சஞ்சிகையின் வார இதழில் ''மூன்றாம் தரப்பின் தலையீடு! குறுக்கிடும் இரு தரப்புக்கள்!'' என்ற தலைப்பில் 'நாரதர்' எழுதிய ''எக்ஸ்ரே ரிப்போர்ட்'' இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

''இலங்கையின் இனப்பிரச்சனை விவகாரத்தில் மூன்றும் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுக்கு அரசாங்கம் முன் வந்து புலிகளையும் அதற்கு இணங்குமாறு அழைப்பு விடுப்பீர்களா?'' என்று கேட்டிருக்கலாம்.

அப்படிக் கேட்டிருந்தால் பதில் சொல்வதில் ஒரு சிரமம் உண்டு.

''ஆம் என்று சொன்னால் யுத்தம் மூலமே சமாதானம். புலிகளை தோற்கடித்தே தீருவோம்'' என்று அரசாங்கம் கூறிவரும் கருத்து பலவீனமாகிவிடும். யுத்தத்தில் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு கிடையாது என்று விமர்சனங்கள் எழும்.

''இல்லை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை புலிகளை நாம் தனியாக கவனித்துக் கொள்வோம்'' என்று நேரடியாகப் பதில் சொன்னால், வெளியுலகில் அரசாங்கத்தின் மீதுள்ள ''சமாதானத்தை விரும்பும் அரசு'' என்ற ''இமேஜ்'' கெட்டுவிடும்.

உள்நாட்டில் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றி பெற்றுவரும் அரசாங்கம் என்ற ''இமேஜை'' காப்பாற்றியாக வேண்டும்.

வெளியுலகில் சமாதானத்தை விரும்பி வேறு வழியில்லாமல் புலிகளுடன் யுத்தம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள அரசாங்கம் என்ற ''இமேஜை'' காப்பாற்றியாக வேண்டும்.

உள்நாட்டில் தமது 'இமேஜை' அரசாங்கம் காப்பாற்றியாக வேண்டுமானால் புலிகளுடன் தாமாக பேச்சுவார்த்தைக்குச் செல்ல முடியாது. பேச்சுக்கு வருமாறு புலிகளை உடனடியாக அழைக்கவும் முடியாது.

வெளியுலகில் தனது 'இமேஜை' காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் பேச்சு வார்த்தைகளுக்கு முற்று முழுதாக மறுப்புத் தெரிவிப்பதாக காட்டிக் கொள்ளக் கூடாது.

இந்த நிலைப்பாடுகளுக்கு ஏற்பவே 'புரொன்ட்லைன்' பேட்டியில் கேள்விகளும், அதற்கான பதில்களும் அமைந்துள்ளன.

'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை பிரபாகரன் கோரினால் அரசு பரிசீலிக்கத் தயார்' என்று ஜனாதிபதி கூறியிருப்பதும் பூவா? தலையா? விவகாரம் தான்.

பூ விழுந்தால் ''பேட்டிங்'' தலை விழுந்தால் 'போலிங்'.

அதாவது, ''புரொன்ட்லைன்'' பேட்டியைப் பார்த்துவிட்டு, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு தயார் என்று பிரபாகரன் அறிவித்தால் புலிகள், அது பந்துவீச ஆரம்பித்தது மாதிரித்தான்.

உடனே அரசாங்கம் துடுப்பெடுத்தாட ஆரம்பிக்கும். 'புலிகள் பலவீனமாகிவிட்டார்கள். அதனால்தான் தாமாக வந்து மத்தியஸ்தம், பேச்சுவார்த்தை என்றெல்லாம் கோரிக்கை விடுக்கிறார்கள். இது யுத்தத்தில் கிடைத்த பலன் தானே' என்று அரசாங்கம் சொல்ல முடியும். அதன் மூலம் ஒரு சிக்ஸர் அடித்துவிடலாம்.

'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இப்போது தேவையில்லை' என்று புலிகள் மறுத்தால், அரசாங்கம் பந்து வீச ஆரம்பிக்கும். 'புலிகள் உலக நாடுகளைக்கூட நம்பத் தயாராக இல்லை. இவர்களோடு போர் செய்வதைத் தவிர வேறு வழியில்லை' என்று அரசாங்கம் சொல்லும் வெளியுலகில் புலிகள் 'கிளீன்போல்ட்'டாகி விடுவார்கள்.

எக்கருத்தும் கூறாமல் புலிகள் மௌனமாக இருந்தாலும் அரசாங்கத்திற்கு சாதகம் தான். நாம்தான் முன்னரே சொல்லிவிட்டோமே, புலிகள்தான் விருப்பம் இல்லாமல் இருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ளலாம்.

புலிகளுக்கும் 'பேட்டிங்' செய்வதா? 'போலிங்' செய்வதா? என்று உடனடியாகத் தீர்மானிப்பதில் சிரமங்கள் இருக்கின்றன.

### 3 ஆம் தரப்பு எந்த நாடு?

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு தயார் என்று உடனடியாக புலிகள் அறிவித்தால் அந்த 'மூன்றாவது தரப்பு எது? என்ற கேள்விக்கும் பதில் சொல்லியாக வேண்டும்.

தற்போதைய நிலையில் இந்தியாவில் தமக்குச் சாதகமான நிலை ஒன்றையே புலிகள் விரும்புகின்றனர்.

தமிழ் நாட்டுக்கு அகதிகள் செல்வதற்கு புலிகள் அனுமதித்தமைக்கு அதுவும் ஒரு பிரதான காரணம்.

எதிர்பார்த்தது போலவே அகதிகள் பிரச்சினை தமிழக அரசுக்கு தர்மசங்கடத்தைக் கொடுத்திருக்கிறது. தமிழக முதல்வர் கலைஞர் 'இந்திய மத்திய அரசு தலையிட்டு இலங்கை அரசுடன் பேச வேண்டும்' என்று கூறிவருகிறார்.

இந்நிலையில் 'இந்தியா' தவிர்ந்த மூன்றாம் தரப்பொன்றின் பெயரைச் சொல்வது புலிகளைப் பொறுத்தவரை இராஜதந்திரமாகாது.

அவ்வாறு இந்தியாவை மீண்டும் புலிகள் ஓரம் கட்டினால் இந்தியாவுக்கும், புலிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் ஒரு படி வளரவே செய்யும். அரசாங்கம் அதனைத் தனக்குச் சாதகமாக்கி கொள்ளும்,

எனவே 'மூன்றாம் தரப்பு' மத்தியஸ்த விடயத்தில் புலிகள் உடனடியாக தடாலடியாக கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கப் போவதில்லை. குறிப்பாக பிரபாகரன் நேரடியாகக் கருத்துக் கூறப்போவதில்லை.

அதனை உணர்ந்துதான் 'பிரபாகரன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரினால்...' என்று கேள்வி தொடுக்கப்பட்டுள்ளது.

'மூன்றாம் தரப்பு' மத்தியஸ்தம் தொடர்பாக புலிகள் மறுப்புத் தெரிவிக்கப் போவதில்லை. அமெரிக்கா விரும்பினால் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தலையிட்டு மத்தியஸ்தம் செய்யலாம் என்று விடுதலைப் புலிகள் பத்திரிகையில் சில மாதங்களுக்கு முன்னர் ஆசிரியர் தலையங்கம் வெளியாகியிருந்தது.

இலங்கை அரசுக்கு அமெரிக்கா உதவி செய்வதைத் தடுக்கும் வகையில் புலிகள் தெரிவித்த கருத்தே அதுவாகும்.

உண்மையில் அரசும், புலிகளும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்ற விடயத்தை 'வெளியுலகம் மீது நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்' என்று காட்டிக் கொள்ளவே பயன்படுத்துகின்றனர்.

இரு தரப்பில் ஏதாவது ஒரு தரப்புக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்த விடயத்தில் உண்மையான அக்கறை காட்டினால் அதற்கான முயற்சிகளில் ஈடுபட பல வாய்ப்புகள் உள்ளன.

### பிரிட்டிஷ் அமைச்சரின் இலங்கை விஜயம்

'புரொன்ட்லைன்' சஞ்சிகைக்கு ஜனாதிபதி பேட்டி கொடுத்த பின்னர் தான் பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் டாக்டர் ஸியாம் பொக்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

அரசும், புலிகளும் விரும்பினால் மத்தியஸ்தம் செய்ய பிரிட்டன் தயார் என்று பகிரங்கமாகவே அவர் கூறியிருந்தார். அவரது கருத்து தமது காதில் விழுந்தது போலவே அரசாங்கம் காட்டிக் கொள்ளவில்லை. புலிகளும் அது தொடர்பாக மூச்சு விடவில்லை.

ஆக, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு அழைப்புமில்லை, மறுப்புமில்லை என்ற நிலையில்தான் இருதரப்புமே இருக்கின்றன.

இருதரப்போடும் சம்பந்தப்படாதவர்கள் தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக பேசிக்கொண்டிருக்கிறார்கள். தமது விருப்பப்படி மூன்றாம் தரப்பாக செயற்படக் கூடிய நாடுகளின் பெயர்களையும் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

தற்போதைய நிலையில் மூன்றாம் தரப்பா மத்தியஸ்தம் செய்ய விரும்பும் எந்தவொரு நாட்டுக்கும் இரு தரப்பின் சம்மதமும் தான் தேவை.

சம்மதம் கிடைத்தால் எந்த நிலையில் இருந்து பேச்சுக்களை ஆரம்பிக்க இரு தரப்பும் விரும்புகின்றன என்பது அடுத்த கேள்வியாக இருக்கும்.

'வடக்கில் படையினர் கைப்பற்றிய பகுதிகளில் இருந்து திரும்பிச் சென்றால் தான் பேச்சுவார்த்தை' என்பது புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு.

'புலிகள் மீண்டும் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளத்தக்க நிலை ஏற்படாது என்ற உத்தரவாதம் இருந்தால் தான் பேச்சு நடத்தலாம்' என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா.

இந்த இரு நிலைப்பாடுகளும் மூன்றாம் தரப்பொன்றால் தீர்வு காண முடியாத விடயங்கள்.

யாழ்: குடாநாட்டில் இருந்து படையினர் திரும்பிச் செல்லவேண்டும் என்று மூன்றாம் தரப்பு எதுவும் அரசாங்கத்தைக் கோரமுடியாது. புலிகளுக்கும், படையினருக்குமான பலப்பரீட்சை மூலம் தீர்வு காணவேண்டிய பிரச்சினையே அதுவாகும்.

அதுபோல பேச்சுவார்த்தைக் காலத்தில் இருதரப்பும் மோதல்களில் ஈடுபடக் கூடாது என்று மட்டுமே மூன்றாம் தரப்பு சொல்ல முடியும். இரு தரப்பும் தமது அணிகளைப் பலப்படுத்தும் விடயத்தில் மூன்றாம் தரப்பு தலையிட முடியாது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தையில் நியாயமான ஒரு தீர்வை எட்டுவதற்குத்தான் மூன்றாம் தரப்பினர் மத்தியஸ்தம் வகிக்கலாமே தவிர, இரு தரப்பின் பலம், பலவீனம் தொடர்பான விடயங்களில் மூக்கை நுழைக்க எந்தவொரு நாடும் விரும்பாது.

எனவே இரு தரப்பின் நிபந்தனைகளும் மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்தத்துக்கு ஏற்றதாக இல்லை.

### சமபலம் இழக்க இருதரப்பும் விரும்பாது

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் இருதரப்பும் சமபலமாக இருக்கும் வரை, அந்த சமபலம் இழக்கப்படுவதை இரு தரப்புமே விரும்பாது. இரு தரப்பில் ஒரு தரப்பு பலவீனமாகும் கட்டம் ஏற்பட்டால் தான் நிபந்தனைகளில் தளர்வுகள் ஏற்படும். 'விழுந்தும் மீசையில் மண்படவில்லை' என்ற கதையாக நிபந்தனைகள் விடயத்தில் ஓர் உடன்பாட்டுக்கு வரக் கூடியதாக இருக்கும்.

அரசாங்கத்தைப் பொறுந்தவரை வடக்கு - கிழக்கு யுத்தத்தில் முன்னைய அரசாங்கங்களைவிட தாம் மட்டுமே உறுதியாகவும், வெற்றிகரமாகவும் நடந்து கொள்வதாக காட்டிக் கொள்ளவே விரும்புகிறது.

அடுத்த தேர்தலில் அரசாங்கம் தனது வெற்றிக்கு நம்பியிருக்கும் துருப்புச் சீட்டும் அதுதான்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்பட்டால் அரசுக்கு இலாபமா? நஷ்டமா? என்று பார்த்தால் நஷ்டம்தான்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசாங்கம் தற்போது முன்வைத்துள்ள யோசனைகள் தமிழ்க் கட்சிகளால் கூட ஏற்றுக் கொள்ளப்படவில்லை, திருப்தி கொடுக்கவில்லை. ஆனால் அந்த யோசனைகளைக் கூட இனவாதிகள் எதிர்த்து வருகிறார்கள். எனவே இந்த யோசனைகளை வைத்துக் கொண்டே தடுமாறும் அரசாங்கத்தால் இதற்கு மேலான ஒரு தீர்வுக்குச் செல்ல முடியாது.

இந்நிலையில் மூன்றாம் தரப்பு ஒன்று தலையிடுமானால் தற்போதைய யோசனைகளில் உள்ளதைவிட மேலும் சில விடயங்களைச் சேர்க்க வேண்டி ஏற்படலாம். அதனால் அரசுக்கு அரசியல் ரீதியில் பாதகங்கள் ஏற்படும்.

### எறிந்த பந்து திரும்பி வரும்

இந்திய — இலங்கை ஒப்பந்த நேரத்தில் ஜே' ஆர். இலங்கை மக்களுக்கு துரோகம் செய்துவிட்டார் என்று பிரசாரம் செய்தது சிறிலங்கா சுதந்திரக்கட்சி.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் அடிப்படையில் தற்

( 5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MATHS CENTRE
M. M. V. Road, Nelliady.

## A/L 97 DAY CLASS
(பகல்நேர வகுப்பு)

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. அன்ரனி |
| வர்த்தகம் | — | திரு. பசில் |
| அளவையியல் | — | திரு. சத்தியசீலன் |
| கணக்கியல் | — | திரு. சண் |
| | — | திரு. பார்த்திபன் |
| தமிழ் | — | திரு. அமரசிவம் |
| | — | திரு. ரூபன் |
| இந்து சமயம் / இந்து நாகரிகம் | — | பிரபல ஆசிரியர் |
| தூய கணிதம் / பிரயோக கணிதம் | — | திரு. குமுக்கேசன் |

ஆரம்பம்: 01-11-96
A. m. 8-30


## O/L DAY CLASS
(மீட்டல் பகல்நேர வகுப்பு)
(சகல பாடங்களும்) தவணைரீதியாக.

ஆரம்பம்: 01-11-96
A. m. 8-30

(சி/3369)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 10 — 08 — 1917



மறைவு: 12 — 11 — 1995

அமரர். குரும்பசிட்டியூர்
### வைத்திலிங்கம் இளையதம்பி
(இளைப்பாறிய ஆசிரியர்)
திதி: 31 - 10 - 1996

பண்பின் உயர்விடமாய் பாசத்தின் ஊற்றிடமாய்
அறிவுக் களஞ்சியமாய், கவிஞனாய், நல்லாசிரியனாய்
எமக் கென்றும் நன்னெறியூட்டிய எமதினிய
தெய்வமே! எந்தையே;
துன்பம் எது நேரிடினும் துணிந்து
முகங் கொடுத்து வாழ்
என்று கூறும் தாங்கள், புண்ணிய பூமியாம்யாழ்நகரை
விட்டகலும் துன்பமதைத் தாங்கொணாமற் சில
நாள்களில் சென்றீரோ!
எமைத் தனியே விட்டு தாங்கள் மீளாத்துயில்
கொண்டதேனோ?
ஆண்டொன்று சென்றதய்யா ஆறாது உம் நினைவு
உமதாத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்
ஆண்டவனை.

உங்கள் பிரிவால் அனுதினமும் ஆறாத்துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வவுணத்தம்பை வீதி,
குரும்பசிட்டி,
தெல்லிப்பளை.

(43399)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 20 — 11 — 1920



உதிர்வு: 12 — 11 — 1995

### அமரர் வைரவி மார்க்கண்டு
திதி: 31 - 10 - 1996

ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு அகலாது உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

19, மார்மகள் வீதி,
அரியாலை.

அஜந்தா
போட்டோ வீடியோ
நல்லூர்.

(43396)

## தீக்கிரை

சென்னை, ஒக் 31

சென்னையில் போர் நினைவுச் சின்னத்துக்கு அருகே குடிசைப் பகுதி ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 300-க்கும் அதிகமான குடிசைகள் எரிந்து நாசமாகின. (இ-3)

## இனப்பிரச்சினை...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதுள்ள தீர்வு யோசனைகளுக்கு மேலான ஒன்றை அரசாங்கம் வழங்க வேண்டி ஏற்பட்டால் எறிந்த பந்து திரும்பி வரும் முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூறிய அதே குற்றச்சாட்டை ஐக்கிய தேசியக் கட்சி திருப்பிச் சொல்லும்.

எனவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்படாமல் தவிர்க்கக்கூடிய நிபந்தனைகளையே அரசாங்கம் முன்வைக்கும்.

புலிகளைப் பொறுத்தவரை தலையே போனாலும் சமஷ்டிக்கு குறைந்த ஒரு தீர்வுக்கு அவர்கள் முன்வர முடியாது. வடக்கு - கிழக்கு இணைப்பு விடயத்தில் விட்டுக் கொடுக்கவும் முடியாது.

தற்போதைய நிலையில் வடபகுதியில் யாழ். குடா நாட்டிலும், கிளிநொச்சி நகரிலும் புலிகள் தமது பிடியை இழந்துள்ளனர். மரபுப் போர் முறையில் ஏற்பட்ட பின்னடைவுகளே அவையாகும்.

எனினும் கெரில்லாப் போர் முறை மூலமாக வடக்கில் நிலை கொண்டுள்ள படையினரை பொறிக்குள் சிக்க வைக்க முடியும் என்பதே புலிகளது நம்பிக்கையாக இருக்கிறது.

கரும்புலிகள் அணியில் நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் தமக்குச் சாதகமான நிலை ஏற்படும். படையினரது நடவடிக்கைகள் காரணமாக புதிய உறுப்பினர்களும் பெருமளவில் தமது அணிகளுக்கு வருவார்கள் என்பதே புலிகளது நம்பிக்கை.

### 3ஆம் தரப்பு எப்பொழுது சாத்தியமாகும்?

இந்நிலையில் மூன்றாம் தரப்பு ஒன்று தலையிட்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் போன்ற ஒரு தீர்வுக்கு நிர்ப்பந்தித்தால் தமது இயக்க உறுப்பினர்களின் உத்வேகம் பாதிக்கப்படலாம். நிர்ப்பந்தத்துக்கு பணிய மறுத்தால் வெளியுலகில் கெட்ட பெயர் ஏற்படலாம். மூன்றாம் தரப்பாக வரும் நாடுகளைப் பகைக்க வேண்டியும் ஏற்படலாம் என்றே புலிகள் நினைப்பார்கள்.

குறைந்த பட்சம் வடக்கு - கிழக்கில் தமது பலம் தற்போதுள்ளதை விட மேலோங்கும் நிலைவரையாவது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தைத் தவிர்க்கவே புலிகள் விரும்புவார்கள்.

எனவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் உடனடியாக ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படவில்லை.

எனினும் என்றோ ஒரு நாள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்று ஏற்பட்டேயாகும். எதிர்கால யுத்த முனை நிலைவரங்கள்தான் அதற்கான அவசியத்தை உருவாக்குமே தவிர, தற்போதைய அரசியல் அணுகுமுறைகள் அல்ல. கசப்பாக இருந்தாலும் உண்மை நிலைவரம் அதுதான்.

போரிடும் இரு தரப்புகளில் ஒரு தரப்பு யுத்தம் தொடர்வதைக் காட்டிலும் அதனை நிறுத்துவதே தனது அரசியல் - இராணுவ ரீதியான வீழ்ச்சியைத் தடுக்கும் என்ற கட்டத்துக்குச் சென்றாக வேண்டும். அப்போது தான் அவமானகரமான தோல்வியைவிட சமாதானஞ் செய்து கொள்வது பரவாயில்லை என்ற ஞானோதயம் பிறக்கும். [illegible] மூன்றாம் தரப்பின் தலையீட்டுடன் பேச்சு நடத்தும் கதவைத் திறக்கவைக்கும். ★

வேலணை பெருங்குளம்
## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான
ஜீர்ணோர்த்தாரண அஸ்டபந்தன பிராயச்சித்த
## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான தாதுவருஷம்- ஐப்பசித் திங்கள் 16ம் நாள் 1 11-1996 வெள்ளிக்கிழமை - நாளை புனர்பூச நட்சத்திரமும், பூர்வ ஸஷ்டித்திதியும் கூடிய காலை 9. 22 மணிமுதல் 10. 28 மணி வரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் நிகழும். அவ்வமயம், அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வந்து, அம்பாளின் அருள் ஆசியைப் பெற்று உய்வீர்களாக!

மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூஜையும் (அன்னதானம்) நடைபெறும்.

குறிப்பு:-

I. எண்ணெய் சாத்துதல் வைபவம் இன்று வியாழன் பிற்பகல் 3 30 மணி வரை இடம்பெறும்.
II. தொடர்ந்து 11 தினங்களும் காலை மண்டலாபிஷேகமும், அலங்கார உற்சவமும் நடைபெற்று 12 ஆம் நாள் (12-11-96) செவ்வாய்க்கிழமை மண்டலாபிஷேக பூர்த்தியும் அன்றைய காலையில் அம்பாளுக்கு விசேட சங்காபிஷேகம், தண்டிகை உற்சவமும் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதமகுரு
சிவஸ்ரீ சு. வைத்தீஸ்வரக் குருக்கள்
அம்பிகை அடியார்கள்.

(43407)

## கண்ணீர் அஞ்சலி

செல்வன்
### நவரெத்தினம் கலைச்செல்வன்
(நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயம்
க. பொ. த. சாதாரணதர மாணவன்)

அவர்களது அகாலமரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், துன்பமும் அடைகின்றோம். அவரைப் பிரிந்து வாழும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

யா/ நல்லூர் இந்துதமிழ் பெண்கள் பாடசாலை
(மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

(43416)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி
அயராது உழைத்த உத்தமர்



### கதிரவேலு சந்திரராசா
(தலைவர், ஊழியர் நலன்புரிச் சங்கம், வலிகாமம்
ப.தெ.வ.அ கூ. சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்)

உதயம்: 05-05-1953

அஸ்தமனம்: 31-10-1995

வலிகாமம் கொத்தணியின் பொதுமுகாமையாளராகி
ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் தலைவராகி
கூட்டுறவின் வளர்ச்சிக்கு வித்திட்ட
சந்திரராசாவே! உங்கள் அயராத சேவையைப்
பாட்டினுள் அடக்கலாமா? இளவயதில்
உரமான உங்கள் ஊக்கத் திறமையை
நாட்டு மக்கள் வியந்த வேளை
வரம் பெறச் சென்றீர்களோ?
உங்கள் பிரிவின்துயரை
ஏட்டினுள்ளே அடக்கலாமா?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புடன் நினைவு கூருகிறோம்:
அங்கத்தவர்கள்
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் ப. தெ. வ. அ. கூ. ச.
கொத்தணி, மானிப்பாய்.

(43387)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணூறுக்கும் மேற்பட்ட சடலங்கள்

# கிளிநொச்சி, முல்லையில் எரிக்கப்பட்டன!

முல்லைத்தீவு முகாம் தாக்குதலின் முதல் இரண்டு நாள்களும் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை விறுவிறுப்பான நாள்கள்.

தாக்குதல் மற்றும் மீட்கப்பட்ட ஆயுதங்கள், தளபாடங்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு வருதல், படையினரின் மீட்பு அணிகள் முகாம் பகுதிக்கு வராமல் 'கட்-அவுட்' போடுதல், இன்னோரன்ன பணிகளில் ஈடுபட்டிருந்த புலிகள், படையினரின் சடல ஒப்படைப்புக் குறித்துசிந்தித்து முடிவெடுப்பதற்குள் தாக்குதல் ஆரம்பித்து 48 மணி நேரம் கடந்து விட்டது.

### செஞ்சிலுவையுடன் தொடர்பு

சுமார் எண்ணூறு முதல் ஆயிரம் வரையானபடையினரின் சடலங்களைத் திரட்டி ஒன்று சேர்த்துக் கொண்டு வந்து ஓரிடத்தில் குவித்து சடலங்களில் இருந்த ஆயுத உபகரணங்கள் மற்றும் பொருள்களை அகற்றுவது ஒரு புறம் நடக்க —

சடலங்களை அரசிடம் ஒப்படைப்பது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொண்டு பேச்சு நடத்துவது மறுபுறம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

கிளிநொச்சியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உப அலுவலகத்துடன் புலிகளின் அரசியல் பிரிவு பிரமுகர்கள் இது குறித்துப் பேச ஆரம்பித்தனர்'

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கிளிநொச்சி உப அலுவலகம் இந்த விவகாரம் குறித்து வவுனியா ஊடாக அரசுடன் தொடர்பு கொண்டது.

இதற்கிடையில் —

முதல் நாள் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள் 48 மணி நேரத்தைக் கடந்து விட்டதால் அழுகி நாற்றம் எடுக்கத் தொடங்கி விட்டன.

வழக்கமாக அழுகத் தொடங்கிய ஒரு சடலத்துக்கு அருகில் நல்ல நிலையில் உள்ள மற்றொரு சடலம் கிடந்தாலேயே இரண்டாவது சடலமும் விரைவில் நுண் கிருமிகளின் பரவுகைக்கு உள்ளாகி விரைவில் அழுகத் தொடங்கி விடும்.

இங்கு பல நூற்றுக் கணக்கில் சடலங்களை ஒன்றாகப் போட்டு வைத்தால் கேட்கவும் வேண்டுமா?

### சடலங்கள் எடுத்து வரப்பட்ட வழியில்...!

முல்லைத் தீவிலிருந்து வன்னிப் பெருநிலப் பரப்பின் ஏனைய பகுதிகளுக்கு வாகனங்களில் படையினரின் சடலங்கள் எடுத்து வரப்பட்ட போது, வழியில் அந்த வாகனங்களைக் கடந்து சென்றோர், வாகனங்கள் கடந்து சென்று சில நிமிடங்களின் பின்னரும் வீதியில் துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்ததாகச் சொன்னார்கள்.

முல்லைத்தீவு முகாம் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானது குறித்து அடுத்தடுத்து தகவல்கள் வரத் தொடங்கிய போதே படையினரின் இழப்பு பல நூற்றுக் கணக்கில் இருக்கும் என்று பாதுகாப்பு அமைச்சுக்கும், அரச உயர்பீடத்துக்கும் ஓரளவு புரிந்து விட்டது.

பல நூற்றுக் கணக்கில் படையினரின் சடலங்களை ஒப்படைக்க புலிகள் தயாராக இருப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்த போது படையினருக்கு ஏற்பட்ட பேரிழப்பை அரசு பெரும்பாலும் ஊர்ஜிதப்படுத்திக் கொண்டது.

### ஜனாதிபதி நாட்டில் இல்லை

சடல ஒப்படைப்புக் குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் முதல் தகவல் அரசுக்கு தெரிவிக்கப்பட்ட சமயம் நாட்டில் ஜனாதிபதி இருக்கவில்லை; வெளிநாட்டில் இருந்தார்.

இது பற்றிய தகவல் தொலைபேசி மூலம் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டிருந்தாலும் கூட, இது குறித்து ஜனாதிபதியும், பாதுகாப்பு உயர்பீடமும் ஒன்றாகக் கலந்து பேசி, ஆலோசனை நடத்தி ஒரு முடிவு எடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கவில்லை.

தாக்குதலுக்கு உள்ளான முகாம் பகுதிக்கு எப்படியும் ஒரு மீட்பு அணியை அனுப்பியே தீரவேண்டும் என்பதில் தீவிரமாக இருந்த பாதுகாப்பு அமைச்சின் உயர்வட்டாரங்கள், உயிரிழந்து விட்ட படையினரின் சடலங்களை புலிகளிடமிருந்து பெற்றுக் கொள்வதில் அதிக சிரத்தை காட்டவில்லை.

அதற்கு முக்கியமாக மூன்று காரணங்கள் இருந்திருக்கக் கூடும்.

1.) ஒன்று, இரண்டு சடலம் அல்ல; பல நூற்றுக் கணக்கில் சடலங்கள் வந்து குவிந்தால் அவற்றை அடையாளம் காண்பதோ, உரிய மரியாதையுடன் உறவினர்களிடம் ஒப்படைப்பதோ, உயிரிழந்த படையினரின் இல்லங்களுக்கு அனுப்பி வைப்பதோ மிகச் சிரமமான காரியமாக இருக்கும். மீட்புப்

**பகுதி - 11**

படை அணி சம்பந்தமான மும்முரத்தில இருக்குப் படை உயர்பீடம் — கொழும்பு போன்ற பிற இடங்களில் பதற்றம் நிலவும் அவ்வேளையில் — இப்பணியை நிறைவேற்றுவது சுலபமாக இருக்காது.

2 ) சடலங்கள் கொழும்புக்கோ அல்லது வவுனியாவுக்கோ அல்லது நாட்டின் ஏதேனும் ஓர் இடத்துக்கோ வருவதாகத் தகவல் கிடைத்தால், முல்லைத்தீவு முகாமிலிருந்த சுமார் ஆயிரத்து ஐந்நூறு படையினரினதும் உறவினர்கள் அங்கு கூடி விடுவார்கள். அத்தகைய நிலை வீண் ரசபாதங்களை ஏற்படுத்திவிடும்.

1983 ஜூலையில் திருநெல்வேலியில் உயிரிழந்த 13 படையினரின் சடலங்கள் கொழும்புக்குக் கொண்டு வந்தபோது நாட்டில் ஜூலைப் பெருங்கலவரம் வெடித்தது.

இப்போது முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சியால் நாடே அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கும் போது ஆயிரம் வரையான படையினரின் சடலங்கள் தெற்கே வந்து குவிந்தால் நிலைமையைச் சொல்லவும் வேண்டுமா?

3.) முல்லைத்தீவு முகாம் மீதான அதிரடி ஆரம்பித்தது முதல் சில வாரங்கள் வரை முகாமிலிருந்த படையினருக்கு என்ன நடந்தது? எத்தனை சிப்பாய்கள் உயிரிழந்தார்கள்? என்பது போன்ற விவரங்களைத் தானும் உத்தியோகபூர்வமாக வெளியிடாமல், பத்திரிகைகள், வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் போன்றவை வெளியிடுவதையும் 'தணிக்கை மூலம் தடை செய்து கொண்டிருந்தது அரசு. அப்படியிருக்கையில் பல நூற்றுக் கணக்கில் படையினரின் சடலங்களைப் பொறுப்பேற்றால் அந்தளவு எண்ணிக்கையாக படையினர் உயிரிழந்ததை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டதாகிவிடாதா?

### செஞ்சிலுவைக் குழு அறிவிப்பு விடும்

போரில் ஈடுபடும் இருதரப்புகளில் ஒருதரப்பினரிடமிருந்து மற்றொரு தரப்பினரின் சடலங்களைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பொறுப்பேற்று சம்பந்தப்பட்ட தரப்பிடம் ஒப்படைக்கும்போது —

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணிமனை அது பற்றிய உத்தியோகபூர்வ செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிடுவது வழமை.

எனவே செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் படையினரின் சடலங்களை ஏற்பது, ஏற்றுக்கொள்ளும் எண்ணிக்கை அளவு படையினர் உயிரிழந்துவிட்டனர் என்பதை உத்தியோகபூர்வமாக ஒப்புக்கொண்டது போலாகிவிடும் என்பது அரசுக்குத் திட்டவட்டமாகப் புரிந்தது.

எனவே விடயத்தை இழுத்தடித்து, சடலங்கள் பழுதடைந்து விட்டன என்ற காரணத்தை ஏற்படுத்தி சடலங்களைக் கையேற்பதைத் தவிர்க்க முடிவு செய்யப்பட்டதாகத் தெரியவந்தது.

**தொகுப்பு: கவி**

### அரசாங்கம் சமாளிக்க முயற்சி

எனினும் அதேசமயம், படையினரின் சடலங்களைப் பொறுப்பேற்று உறவினர்களிடம் ஒப்படைக்க விரும்பாமல் அதில் அரசு அசிரத்தையாக இருந்தது என்பதை வெளியே காட்டிக் கொள்ளவும் அரசு விரும்பவில்லை. அது வெளியே தெரிந்தால் படையில் இருக்கும் ஏனையோர், அவர்களின் உறவினர்கள் சீற்றம் கொள்வர். வீண் குழப்பம் வரும்.

எனவே ஒப்படைக்கப்படக் கூடிய சடலங்களை பொறுப்பேற்க அரசு தயாராக இருப்பது போன்று 'பாவலா' காட்டவும் அரசு விரும்பியது.

எனவே இது விவகாரத்தில் ஆரம்பத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு மறுப்பு சமிக்ஞை காட்டிய அரசுத் தரப்பு பின்னர் மனம் மாறுவது போன்ற சமிக்ஞைகளை அனுப்பி வைத்தது.

உலக நாடுகளில், பல்வேறு யுத்தங்களில் இதுபோன்ற நிலைமைகளைக் கையாண்ட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு, இந்த விடயத்தில் ஸ்ரீலங்கா அரசின் இக்கட்டு புரியாமல் இருக்கவில்லை. எனவே நிலைமைக்கு ஏற்றவாறு செஞ்சிலுவைக் குழுவும் நசிந்து கொடுத்து அரசுக்கு ஏற்படவிருந்த வீண் சிக்கலைத் தவிர்க்க உதவியது.

### 75 மணி நேரத்தின் பின் சடலங்கள் ஒப்படைப்பு

முகாம் மீதான தாக்குதல் ஆரம்பித்து 75 மணித்தியாலங்கள் கழிந்து விட்ட நிலையில் ஜூலை 20 ஆம் திகதி — ஓரளவு பழுதடையாத நிலையில் இருந்த 451 சடலங்களை விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் உத்தியோக பூர்வமாக ஒப்படைத்தனர்.

ஆனால் அவற்றில் நல்ல நிலையில் இருந்த — அடையாளம் காணக் கூடியவையாக இருந்த — 51 சடலங்களை மட்டும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அரசுத் தரப்பினரிடம் ஒப்படைக்க ஒப்புக் கொண்டு ஏற்றுக் கொண்டது. எஞ்சியவற்றை அரசுப் பிரதிநிதி என்ற முறையில் கிளிநொச்சி அரச அதிபர் பொறுப்பேற்பது என்று முடிவு செய்யப்பட்டது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஏற்றுக் கொண்ட 51 சிப்பாய்களின் சடலங்கள் மட்டுமே வவுனியா ஊடாகத் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

எஞ்சியவற்றில் சுமார் நானூறு சடலங்கள் கிளிநொச்சியில், முருகண்டிக்கு அப்பால்' கொக்காவில் பகுதியில் கண்டி வீதியோரத்தில் கூட்டம் கூட்டமாக போட்டு எரிக்கப்பட்டன.

அவற்றின் சாம்பரை ஒன்றாகச் சேர்த்து தென்னிலங்கைக்கு அரச அதிபர் அனுப்பி வைத்ததாக ஒரு செய்தி தெரிவித்த போதிலும் அதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இதே போன்று —

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பகுதியில் — முல்லைத்தீவு தற்காலிக செயலகத்துக்கு அருகில் உள்ள வீதி வழியாகச் சுமார் இருநூறு — முன்னூறு மீற்றர் செல்லும் போது வழியில் வரும் மயானம் ஒன்றில் மேலும் பல நூறு சடலங்கள் எரிக்கப்பட்டன.

நானூறுக்கும் — ஐந்நூறுக்கும் இடைப்பட்ட எண்ணிக்கை உடைய படையினரின் சடலங்கள் இவ்வாறு முல்லைத்தீவு அரச அதிபரின் கண்காணிப்பின் கீழ் எரிக்கப்பட்டன.

மொத்தத்தில் முல்லைத்தீவு முகாமிலிருந்த சுமார் ஆயிரத்து ஐனூறு படையினரில் 51 பேரின் சடலங்களே தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. படையினரின் மீட்புப் படையணிகள் முல்லை முகாம் பகுதிக்குள் நுழைந்தபோது அங்கும் சில சடலங்களை அழுகிய நிலையில் கண்டார்களாயினும், அவை அரசுத் துருப்புகளினதா அல்லது விடுதலைப் புலிகளினதா என்பது தெரியாததால் முல்லைத் தளத்திலேயே அவற்றைப் படையினர் எரித்து விட்டனர்.

★ ★ ★

முல்லைத்தீவுத் தாக்குதலின் விளைவு, பெறுபேறு என்ன? அரசின் பதிலடி நடவடிக்கை எப்படி அமைந்தது?

விவரம் இக் கட்டுரைத் தொடரின் இறுதி அத்தியாயத்தில்!

(தொடரும்)



படையினரின் சடலங்களை ஒப்படைப்பது தொடர்பாக கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் கரிகாலன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளுடன் உரையாடிக் கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட படம்.

## மாஹோ கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கம்

வடமராட்சி, ஒக். 31

மாஹோ கப்பலில் மேல் தட்டில் இருந்த உருளைக் கிழங்கு, அன்னாசிப் பழம் ஆகிய பொருள்கள் நேற்று இறக்கப்பட்டன.

இவை தனியார் வர்த்தகர்களுக்கென எடுத்துவரப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக ஆய்வு கூட உபகரணங்களும் இக் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

(இ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

த. பாலசுப்பிரமணியம் ஆகிய எனது 302500029 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், வேறு ஆவணங்களும், காசுப் பேர்சும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து த. பாலசுப்பிரமணியம், ''அன்பகம்'', சுழிபுரம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (43411)

நடராசா மனோரஞ்சினி ஆகிய எனது 556210985 V இலக்க அடையாள அட்டை கடந்த சனிக்கிழமை (26-10-96) யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி நவீனசந்தை, சிருயோன் குளிரகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-3375)

## திருமணசேவை

தினம் 2 மணிக்கு பின்னர், விடுமுறைகளில் எந்நேரமும் மணமக்கள் பதிவுக்கும், தேர்வுக்கும் பெற்றோர், பாதுகாவலர் வரலாம். ''சேவையும், நம்பகமானதும்''; 03, யாழ் வீதி, யாழ்ப்பாணம். (பலாலி, பருத்தித்துறை, சிறாம்பியடி வீதிகளின் சந்திக்கு அருகில்) (43403)

## உலக சிக்கன தினம்

சிக்கன சலவைக்கு நுரை வளம் கூடிய மில்க்வைற் சலவைப்பவுடர் பாவியுங்கள். மாணவமணிகளின் சீருடைகளை பிரகாசமாக்கவும், வெண்மையாக்கவும் வல்லது. பாவித்த வெற்று பக்கற்றுகளை அனுப்பி ஒரு ஆப்பியாசக் கொப்பி அல்லது ஔவையார் நீதி நூல் ஒன்றைப் பெற்றுக்கொள்ளவும். மில்க்வைற் (சி-3379)

## விவசாய போதினி

ஆண்டு 9 — 12 வகுப்புகளுக்குகந்த விரிவான விவசாய பாடநூல் - படங்களுடன் விலை ரூபா 50/-. உடுவில்- கே. கே. எஸ். வீதி நீரஜா அச்சகத்திலும், யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலையிலும் பெறலாம் (43297)

## மிதி வெடியில் சிக்கிய மாடுகள்

திருவடி நிலை, காட்டுப்புலம் மழுவை பகுதிகளுக்கு மேயச் சென்ற மாடுகளில் இரு மாடுகள் மிதிவெடியில் சிக்குண்ட சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இந்த மாடுகளில் ஒன்று காலை இழந்தது; மற்றைய மாடு அதே இடத்தில் உயிரிழந்தது. (இ-28)

## நன்றி

தவற விடப்பட்ட சங்கிலியும், சிவா என்று பதிக்கப்பட்ட பென்ரனும் யாழ் போதனா வைத்திய சாலையில் கடமை புரியும் இல. 49, பலாலி வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த செல்வி ஜெயதர்சினி அவர்களால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. இவருக்கு எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவலிங்கம் சிவபாதம்
அரசடி 3 ஆம் லேன்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(43409)

---

யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி

# ஆண்டு 6 அனுமதி 1997

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை 04-11-96 தொடக்கம் கல்லூரி அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: **22 - 11 - 96**

அதிபர்.

(43410)

---

# 45-ம் நாள் நினைவலைகள்



படைப்பு: 06 — 04 — 1969

பறிப்பு: 17 — 09 — 1996

## செல்வி பரமேஸ்வரி தம்பையா

(உஷா)

(பொருளியல் சிறப்புக்கலை, 4 ஆம் வருடம், யாழ். பல்கலைக் கழகம்)

அன்புதனை அருவியாக்கி!
பண்புதனை சிகரமாக்கி
யார்போற்ற வாழ்ந்த பாசமிகு மகளே
நாள்கள் பல கடந்தோடினாலும்
உன் மலர்ந்த முகமும் முத்தான சிரிப்பும்
களங்கமில்லா உள்ளத்தின் கனிவான பேச்சும்
என்றும் எம்மில் நிழலாடும்.
சேவை பல செய்திட காத்திருந்த உஷாவே!
உன் பொன்னான எதிர்காலத்தை காலதேவன்
இடைநடுவில் ஏன் பறித்தான்?


உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

தாய், சகோதரி,
மைத்துனர்கள், உறவினர்கள்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
(43398)

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## பொன்னையா பாலச்சந்திரன்

மண்ணில்: **15-03-1952**

விண்ணில்: **25-10-1994**

திதி: 31 - 10 - 1996

ஆசைக்கு ஒரு மகனாய் வந்துதித்த செல்வா! நீர் மறைந்து ஈராண்டு சென்று விட்டதையா! உமது அன்பு முகம் மறக்க முடியாமல் தவிக்கின்றோம்.

உமது ஆத்மா சாந்தி அடைய எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.

கல்வியங்காடு,
3-ம் சட்டையடி.
(43406)

---

தெல்லிப்பழை
மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர் சங்க
வருடாந்தக் கூட்டம் பற்றி ஆலோசிப்பதற்கான

# விசேட பொதுக்கூட்டம் ஒத்தி வைப்பு

1. 22-09-96 உதயனில் 26-09-96 இல் நிகழுமென விளம்பரம் செய்யப்பட்டு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்ட மேற்படி கூட்டம் அங்கத்தவர் பட்டியல் தயாரிக்கப்பட்ட பின், பத்திரிகை அறிவித்தல் மூலம் கூட்டப்படும்.

   27-10-96 உதயனில் 02-11-96 இல் நடக்குமென அதிபரால் அறிவிக்கப்பட்ட விசேட பொதுக் கூட்டம் எம்மால் ஒத்தி வைக்கப்பட்ட வருடாந்தக் கூட்டம் பற்றி ஆலோசிப்பதற்கான விசேட பொதுக் கூட்டத்தின் தொடர்ச்சி அன்று என்பதனையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2. ஆயுட்கால அங்கத்தவர்களை தங்கள் முகவரிகளைக் செயலாளருக்கு அறிவித்துதவுமாறும் ஏனைய பழைய மாணவர்களைச் செயலாளரோடு தொடர்பு கொண்டு சந்தா செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்து உதவுமாறும் வேண்டுகிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

வ. இராசதுரை
A. G. A பணிமனை வீதி, உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

அ. வாமதேவன்
உபதலைவர்


வ. இராசதுரை
செயலாளர்

(43414)

---

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

உழைப்பாளர்களை உயர்விக்க
உதித்த '' சந்திரன் ''



## கதிரவேலு சந்திரராசா

(பொதுமுகாமையாளர், வலிகாமம் ப. தெ. வ. அ. கூ. ச. கொத்தணி, மானிப்பாய்)

மலர்வு: **05 — 05 — 1953**

உதிர்வு: **31 — 10 — 1995**

தாழ்வுற்ற மக்கள் தன்னைத்
தலை நிமிர்ந்துயர்ந்து நித்தம்
வாழ்வுற்ற வளம் பெருக்க
வைத்தவர் வரிசை தன்னில்
கால் பதித் தெங்கள் உள்ளக்
கடலினில் வாழும் சந்திர!
நீள் பயணத்தைச் செய்து
ஆழ்துயர் தந்த தேனோ?

ஆண்டொன்று சென்றாலும் என்றும் நினைவு மாறாத,

பணிப்பாளர்கள்/பணியாளர்கள்
வலிகாமம் பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி, மானிப்பாய்.

(43386)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டிலிருந்து வெளியேற ஆயிரக்கணக்கானோர் விருப்பம்!

கொழும்பு, ஒக். 31

யாழ். குடாநாட்டில் இருந்து புறப்பட்டு நாட்டின் ஏனைய இடங்களுக்கு செல்வதற்கு இதுவரை சுமார் 37 ஆயிரம் பொதுமக்கள் விண்ணப்பம் செய்திருக்கின்றனர்.

அரச அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கின்றது.

மேற்படி 37 ஆயிரம் பேரில் 10 ஆயிரம் பேர் மட்டுமே குடாநாட்டில் இருந்து வெளியே சென்று மீண்டும் சொந்த இடம் திரும்ப விரும்புகின்றனர். ஏனைய 27 ஆயிரம் பேரும் குடாநாட்டைவிட்டு வெளியேறி கொழும்பு அல்லது நாட்டின் தென்பகுதியில் எங்காவது வாழ விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்திருக்கின்றனர்.

வடபகுதி நிலைவரம் தொடர்பாக அண்மையில் கொழும்பில் நடந்த உயர் மாநாடு ஒன்றில் வைத்து அரச அதிகாரி ஒருவர் இத்தகவலை தெரிவித்திருக்கிறார்.

வடக்கில் உணவுக்குக் கஷ்டப்பட வேண்டியுள்ளது; தொழில் செய்ய வசதியில்லை; நினைத்தபடி வெளியில் எங்கும் செல்ல முடியாது; வாழ்வு சிறைப்பட்ட வாழ்க்கையாகவே உள்ளது; புனர்வாழ்வு உதவியையும் காணவில்லை. — என்பன போன்ற பலவித காரணங்களைக் காட்டி குடாநாட்டில் இருந்து வேறிடம் செல்வதற்கு பெரும்பாலான மக்கள் விரும்புவதாகத் தெரிய வருவதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

(உ-3)

## வடக்கு அகதிகளைத் தங்கவைக்க

# வவுனியாப் பாடசாலைகள் ஒரு மாதம் மூடப்படுகின்றன

கொழும்பு, ஒக். 31

வடக்கிலிருந்து தாண்டிக்குளம் ஊடாக இடம் பெயர்ந்து வரும் அகதிகளைத் தங்கவைக்கும் பொருட்டு வவுனியா நகரில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்கு மூடப்படவுள்ளன.

மேலும் 10 ஆயிரம் பேரைத் தங்க வைப்பதற்கு வசதியாக நூறு மண்டபங்களும் இப்பாடசாலைகளில் அமைக்கப்படவிருக்கின்றன.

அகதிகளின் நிலைமைகள் தொடர்பாக வவுனியாவில் நேற்று முன்தினம் நடந்த உயர்மட்ட மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வவுனியா செயலகத்தில் வடமாகாண புனரமைப்பு புனர்நிர்மாண அதிகாரசபைத் தலைவர் சோமபால குணதீர தலைமையில் நடந்த இம்மாநாட்டில் அரச அதிபர் கணேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தற்போது வவுனியாவில் —

வேப்பங்குளம் முகாம், நெலுக்குளம் அரசினர் கலைமகள் வித்தியாலயம், வெளிக்குளம் அ.த.க. பாடசாலை, வவுனியா இலங்கை திருச்சபை த.க. பாடசாலை, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, பூந்தோட்டம் கல்வியியல் கலலூரி ஆகியவற்றில் உள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# பற்களைப் பாதுகாப்பதில் அக்கறை கொள்ளுங்கள்

**இன்று தேசிய வாய்ச் சுகாதார தினம்**

இவ்வருடத்திலிருந்து ஒக்ரோபர் 31 ஆம் திகதி, இலங்கையில் தேசிய வாய்ச் சுகாதார தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது

''வாழும் வரை வாயிற் பற்கள்'' என்பது இன்றைய வாய்ச் சுகாதாரத் தொனிப் பொருளாகும்.

நிறை மனிதனாக வாழ்வதற்கு வேண்டப்படுவன எவை? ஆரோக்கியமான பல் வரிசையும் இவற்றில் ஒன்றென உணர்த்தி நிற்கிறது இன்றைய தொனிப்பொருள்.

வாழ்க்கையின் நடுவில் பல் வரிசை இழப்பு அல்லது குறைப்பு சம்பவிப்பதால் சுக வாழ்வு பங்கப்படுகின்றது.

குழந்தை பிறந்து பால் மணம் மாறு முன்னரே ஆதாவது ஆறாவது மாதத்தில் முதற் பல் அரும்பி இரண்டரை வயதில் முதல் பற்தொகுதியான பாற்பல் வரிசை அமைந்து விடுகிறது. பலவித உணவை உண்டு சுவைத்து உயரிய வளர்ச்சியும், அரிய சொற் பயிற்சியும், இனிய நகைப்புமாக மானிடம் உருவாகிறது.

முழு வளர்ச்சியடைந்த மனிதனின் தேவைக்கு இப்பாற்பல் வரிசை அமைப்புப் பொருந்தாது என்று வாழ் நாள் முழுவதும் பயன்தரும் விதத்தில் வலிமை மிக்க ஒரு நிரந்தரப் பல் வரிசை அமைப்பிற்கு ஆறு வயதில் அடித்தளம் அமைக்கத் தொடங்கி, பள்ளிப்பருவம் தாண்டி மனிதன் முழு வளர்ச்சியுறும் தறுவாயில் நிரந்தரப் பல்லமைப்பில் இறுதிப் பல்லாக ஞானப் பல் பூரணப்படுத்துகிறது.

நிறை மனிதனுக்கு திடசாலியாக இருக்க உண்பதற்கும், மனித ஒலி வழித் தொடர்பிற்குரிய சாதனமாகவும், தோற்றப்பொலிவைக் கொடுக்கவும், நேரிய பற்களோடு சேர்ந்த வாய்ப்பகுதி தொழிற்படுகிறது. சீரிய பல் வரிசை வாய்ப்பது துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி கடாட்சத்தையும் குறிக்கின்றதென்றும் உய்த்துணரலாம். 'நிரந்தரப் பல்வரிசை' என்ற பதம், வாழ்க்கையின்போது நிரந்தரமாக இருக்க வேண்டியதைச் சுட்டிநிற்கிறது.

ஆதிகாலத்தில் நீண்ட நாள் வாழ்ந்த மனிதர்கள், பற்களை இழக்காமல் இயற்கையெய்தினர். ஆனால் அண்மைக்காலச் சரித்திரத்தில், வாழ்வின் இடைநடுவே அதிக எண்ணிக்கையில் பற்களை இழந்து பின்னர் இறப்பை அடைகின்றான்.

1984 ஆம் ஆண்டில் தேசிய வாய்ச் சுகாதார ஆய்வின்படி 35 வயது முதல் 44 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 1.1 சத வீதத்தினர் முழுப்பற்களையும் இழந்திருப்பதாகக் கணிக்கப்பட்டது.

இந்த வயதில் 44 சதவீதத்தினர் 15 இற்கும் குறைவான எண்ணிக்கையில் பற்களை உடையவர்களாக இருக்கின்றனர். (1994 ஆம் ஆண்டு வாய்ச் சுகாதார ஆய்வின் பெறுபேறுகள் வெளிவரவில்லை.)

பற்களைப் பாதுகாக்க, அவை வாழ்வின் இடைப் பகுதியில் விழுந்து விடாமல் தடுக்க, உகந்த வழிமுறைகளைக் கைக்கொள்ளப் பழகிக் கொள்வோமாக.

பற் சுகாதாரம் உடலின் ஆரோக்கியத்துக்கு இன்றியமையாதது என்று உணர்ந்து அதிக கவனம் செலுத்துவதற்கு, அக்கறை கொள்வதற்கு எம்மை நாமே பழக்கிக் கொள்வோம்.

அதற்கான வழிமுறைகளைத் தேடி அறிந்து கற்றுக் கொள்வது அவசியம் [illegible] கொள்வோம்.

— உ. சிவபாதசுந்தரம்

## ரெனிஸ் பந்தாட்டம்

உள்ளூராட்சி மற்றும் கூட்டுறவு நிர்வாகங்களை மீண்டும் மாகாண சபை பொறுப்பேற்கப் போவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வடக்கு-கிழக்கு மாகாண சபை இது குறித்து அறிவித்திருக்கிறது.

உள்ளூராட்சித் துறையும் கூட்டுறவுத்துறையும் ஏனைய திணைக்களங்கள் போன்று மத்திய அரசின் கீழ் இயங்கி வந்தன. மாகாண சபை நிர்வாகத் திட்டம் (1988 ஆம் ஆண்டின் பின்னர்) அமுலுக்கு வந்த பின்னர், ஏனைய பல துறைகளுடன் மேற்படி இரு பிரிவுகளும் மாகாண சபையின் நிர்வாகத்துக்கு உரியவை ஆகின.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் பிரதேச சபைகளைக் குட்டிக் கச்சேரிகளாக்கும் திட்டத்தில், உள்ளூராட்சி, கூட்டுறவுத் துறைகள் பிரதேச செயலகங்களின் பணிப் பிரிவுகளாக்கப்பட்டன.

நாட்டின் ஏனைய ஏழு மாகாணங்களில் இத்துறைகள் இரண்டும் உடனடியாகவே பிரதேச செயலகங்களின் கீழ் கொண்டு வரப்பட்டன. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மட்டும் இத்துறைகள் தொடர்ந்து மாகாண சபையின் கீழேயே இயங்கின.

எனினும் பிரதேச செயலகங்கள் (குட்டிக் கச்சேரிகள்) இங்கு முழு அளவில் இயங்கவுள்ளன என்ற அறிவிப்புடன், 1993 ஆம் ஆண்டு இறுதியில் உள்ளூராட்சித் திணைக்களமும், கூட்டுறவுத் திணைக்களமும் கலைக்கப்பட்டு, அவற்றின் பணிகள் பிரதேச செயலகங்களுக்கென ஒதுக்கப்பட்டன.

ஆனால் இப்போது மீண்டும் ஒரு மாற்றம் வருகிறது. உள்ளூராட்சி, கூட்டுறவுத் துறைகள் எதிர்வரும் ஜனவரி தொடக்கம் மீண்டும் மாகாணசபையின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. புதிய மாற்றத்துக்கு மாகாணசபை ஆளுநர் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இவ்வாறு காலத்துக்குக் காலம் செய்யப்படும் மாற்றங்களின் நோக்கம் என்ன? மக்களுக்கு அதிக அளவில் அல்லது இலகுவில் சேவை செய்வதற்காகவா இந்த மாற்றங்கள்? அல்லது அதிகாரிகளின் நன்மைக்காகவும் சிலருக்குப் பதவி உயர்வுகள் கிடைப்பதற்காகவுமா?

வடக்கு - கிழக்கு மாகாண சபையில், தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் எவரும் இல்லை. மாகாண சபை இயங்கவில்லை. அதிகாரிகள் மட்டுமே செயற்படுகிறார்கள். அவர்களே எல்லா முடிவுகளையும் எடுக்கிறார்கள். அதனால் புதிய முடிவுகளும், மாற்றங்களும் மக்கள் நலன் நாடியவையாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

நிர்வாகப் பொறுப்புகள் அங்கும் இங்குமாக — ரென்னிஸ் பந்தாட்டம் போன்று — மாறிமாறி அடிக்கப்படுவதால் மக்களுக்குரிய சேவைகள் உருப்படியாக நடைபெறுவதற்கு வாய்ப்புக் குறைந்துவிடும்.

தட்டிக்கேட்க ஆள் இல்லையென்றால் தம்பி சண்டப் பிரசண்டம் என்ற நிலைக்கு வர முயலக்கூடாது. மாற்றங்களால் எய்தக் கூடிய பலாபலன்கள், பெறுபேறுகள் என்ன என்றாவது மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்

புதிய மாற்றத்தினால் புதிய பெறுபேறு வரலாம். ஆனால் பழைய மாற்றத்தினால் நன்மை என்ன கிடைக்கும்?

## சமய சந்நிதிகளில்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை வெள்ளிக்கிழமை தோறும் நடத்துகின்ற சமய நிகழ்வில் —

நாளை மு.ப. 10 மணிக்கு எம். அருட்செல்வத்தின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

(அ-173)

* * *

வழக்கம்பரை பஜனைச் சபையினர் மாதந்தோறும் வெளியிடும் அபிராமி அந்தாதிப் பாடல் வரிசையில் இன்று 70, 71 ஆவது பாடல்கள் வெளியிடப்படும். வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் இன்று மாலை வெளியீட்டு வைபவம் நிகழும்.

பனிப்புலம் ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெறும் பன்னிரு திருமுறைப் படிப்பின் போது நாளை வெள்ளிக்கிழமை பிற்பகலில் மேற்படி வெளியீட்டின் அறிமுக விழா நடைபெறும்.

(அ-28)

# புளொட் பணிமனை மீது குண்டு வீச்சு!

கொழும்பு, ஒக் 31

வவுனியா வைரவப்புளியங்குளத்தில் உள்ள 'புளொட்' அலுவலகத்தின் மீது நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது இதனையடுத்து அலுவலகத்தில் இருந்த 'புளொட்' இயக்க உறுப்பினர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. சேத விவரம் தெரியவில்லை.

(உ-3)

# லொறி - சைக்கிள் விபத்தில் மாணவன் பலியானார்

கொப்பி வாங்கச் சென்ற மாணவன் ஒருவர் வீதி விபத்தில் மரணமானார்.

நல்லூர் கந்தசாமி கோயில் முன்பாக பருத்தித்துறை வீதியில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை 11 ஆம் ஆண்டு மாணவனும், நல்லூர் கொண்டலடி வைரவ கோயிலடியைச் சேர்ந்தவருமான நவரத்தினம் கலைச்செல்வன் (வயது 15) என்பவரே மரணமானவர் ஆவார். நண்பன் ஓட்டிய சைக்கிளின் பின் பகுதியில் இருந்து சென்ற போது லொறியுடன் விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைக்கு உட்படுத்திய வேளை அங்கு அவர் மரணமானார்.

சைக்கிளை ஓட்டியவர் தெய்வாதீனமாககாயம் ஏதுவுமின்றி தப்பித்துக் கொண்டார்.

சடலம் மரண விசாரணையின் பின் நேற்று தந்தையிடம் கையளிக்கப்பட்டது.

(இ-15)

# வவுனியாப் பகுதிக்குள் தற்கொலைப் படையினர்?

வவுனியா, ஒக். 31

வவுனியாவில் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளையும், பொலீஸ் அதிகாரிகளையும் கொலை செய்வதற்கு விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையினர் மேற்கொண்ட முயற்சி குறித்து விசாரணைகளில் இருந்து தெரியவந்திருப்பதாக வவுனியா தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் லெஸ்லி சரத் எதிரி சூரியா தெரிவித்தார்.

இந்த நோக்கத்துக்காக தற்கொலைப்படை ஒன்றை விடுதலைப்புலிகள் வவுனியாவுக்குள் அனுப்பியுள்ளனர் என்றும் —

இந்த தற்கொலைப் படையில் சுமார் 100 உறுப்பினர்கள் இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# வங்கிக் கணக்கை மாற்ற ஓய்வூதியர்கள் எதிர்ப்பு

## அரசாங்க அதிபருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக். 31

பிரதேச செயலகங்களுக்கு ஓய்வூதியப் பணிகள் பன்முகப்படுத்துவதைத் தொடர்ந்து தத்தமது பிரதேசத்தில் உள்ள வங்கியில் புதிய கணக்குகளை ஆரம்பிக்க வேண்டுமென்று ஓய்வூதியர்களை பிரதேச செயலகங்கள் கோருவது முறையானதல்ல.

இப்படி வடமாகாண ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம் யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

ஓய்வூதியம் பெறுவதற்கு மட்டுமன்றி வேறு பல வங்கிச் சேவைகளுக்காகவும் ஓய்வூதியர் ஒருவர் வங்கிக் கணக்கை வைத்திருப்பதாலும் —

அத்தெரிவு அவரது உரிமை என்பதாலும் —

தற்போது நடைமுறையில் உள்ள வங்கிக் கணக்குகளுக்கே ஓய்வூதியங்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கும்படி சகல பிரதேச செயலகங்களையும் கேட்டுக் கொள்ளவேண்டும்.

இப்படி அரச அதிபருக்கு எழுதிய கடிதத்தில் அந்த அமைப்பு கோரியுள்ளது.

(இ-3)

### நாளை

ஐப்பசி 16
வெள்ளிக்கிழமை
திதி: ஷஷ்டி
முன் இரவு 11.02வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
முற்பகல்8 15 வரை.
ராகுகாலம்: 10.34- 12.04
சுபநேரம்: 6.04- 7.34
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பி. செயலர் பிரிவில் ம. எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ் பிரதேச செயலகப் பிரிவில் இரண்டாம் கட்டமாக குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 4 லீற்றர் மண்எண்ணெய் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் அடுத்த வாரம் முதல் வழங்கப்படவிருக்கிறது

வாகனங்கள், ஜெனரேற்றர்கள் மற்றும் சிறுகைத் தொழில்களுக்கு மண்எண்ணெயை 2 ஆம் கட்டமாகப் பெறுவதற்கு சம்பந்தப்பட்டோர் பிரதேச செயலகத்துக்கு வரத் தேவையில்லை என்றும்—

முதலாம் கட்டத்தில் மண் எண்ணெய் பெற்றவர்களின் பெயர் மற்றும் ஒதுக்கீட்டு அளவு ஆகியவற்றின் விவரங்கள் அடங்கிய பட்டியல் எரிபொருள் முகவருக்கு அனுப்பப்படும் என்றும்—

அங்கு சென்று அடையாளத்தைக் காட்டி மண்எண்ணெயை அவர்கள் பெறலாம் என்றும்—

பிரதேச செயலர் திரு. க. குணராசா தெரிவித்தார்

## உருளைக்கிழங்கு விற்பனை

தென்மராட்சி, ஒக். 31

சாவகச்சேரிச் சந்தையில் நேற்று உருளைக்கிழங்கு விற்பனை செய்யப்பட்டது.

கொழும்பிலிருந்து கப்பலில் கொண்டுவரப்பட்ட உருளைக்கிழங்கு இப்பகுதி தனியார் கடைக்கு வந்ததையடுத்து 1 கிலோ நூறு ரூபா வீதம் அது சந்தையில் விற்பனை செய்யப்பட்டது. (உ-117)

---

## பகிஷ்கரிப்பு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகிஷ்கரித்தும் —

யாழ். நகர் மற்றும் இடங்களில் உள்ள வர்த்தகர்கள் நாளை தமது கடைகளைப் பூட்டியும் —

மாணவர் பகிஷ்கரிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் எனத் தாங்கள் கோரியுள்ளதாகவும் —

பெயர் குறிப்பிட விரும்பாத அந்த மாணவர் பிரதிநிதி சொன்னார்.

மாணவி கிருஷாந்தி, மாணவன் பிரணவன் ஆகியோரின் படுகொலைகளைக் கண்டித்தும் —

மாணவர்களுக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல்களை ஆட்சேபித்தும் —

கடந்த திங்கட்கிழமை முதல் பாடசாலைகளை மாணவர் பகிஷ்கரித்து வருவது தெரிந்ததே.

(உ-11-90-173)

---

## பயிலுநர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எம். பியால வாசுதேவ நாணயக்கார ஆகியோர் பயிலுநர் ஆசிரியர்களுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து நேற்றுப் பிற்பகல் உண்ணாவிரதப் போராட்டத்தை அவர்கள் கைவிட்டனர்.

இந்தப் போராட்டம் சட்ட விரோதமானது: நியாயமற்றது என்ற காரணங்களைக் காட்டி அதனை பயிலுநர் ஆசிரியர்கள் கைவிடும் வரை அவர்களுடன் பேச்சு நடத்துவதில்லை என்று முன்னதாக அமைச்சரவை முடிவு செய்திருந்தது. (உ- 3)

---

## மாணவர் -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளைப் பகிஷ்கரித்து வருகின்றோம். இத்தகைய செயல்களினால் விரக்தியுற்ற எமது மாணவர் சமூகம், மேற்படி பஸ் எரிப்பு மூலம் எமது அதிருப்தியை அரசுக்கு எடுத்துக் காட்டியுள்ளது''- என்று அந்தச் சங்கத்தின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது. (உ)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில்:
12 — 12 — 1941



விண்ணுலகில்
01 — 10 — 1996

## திருமதி புவனேஸ்வரி கமலநாதன்

எனதன்புப் புவனா!
தாயாகி எனைப்பேண யார் வருவார் பாரினிலே,
சேயாகி யான் சிறந்தேன், அம்மா, உன் பரிவினிலே!
வாயார எனதுள்ளம் உரைக்கின்ற துன் பெயரை,
ஓயாது கலங்குகின்றேன் யாரறிவார் என்துயரை.

எனது அன்புத் துணைவியார் அமரர் திருமதி புவனேஸ்வரி கமலநாதன் அவர்களின் அந்தியேட்டி இன்று (31 - 10 - 96) வியாழக்கிழமை அவருடைய இல்லத்தில் நடைபெறும். உறவினர், நண்பர் அனைவரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் நண்பகல் 12. 30 மணிக்கு நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஆ. கமலநாதன் (அன்புக் கணவர்),
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள் மைத்துனிகள்,
மருமக்கள், பெறாமக்கள்.

''கிரவுஞ்சகிரி''
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(43421)

---

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

---

# தலை கீழாகக் கட்டி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:-

கடந்த மாதம் 24 ஆம் திகதியன்று எனது வேலை முடிந்து விக்கினேஸ்வராக் கல்லூரி வீதியில் நான் சென்று கொண்டிருந்தேன். அப்போது இராணுவம் என்னைப் பிடித்துக் கைகளைக் கட்டி விநாயகர் வித்தியாலயத்துக்குக் கூட்டிச் சென்றது.

அங்கு பாலசுப்பிரமணியம், சிறிசிவா ஆகியோர் இருப்பதைக் கண்டேன். அந்த இரண்டு பேரையும் எனக்குத் தெரியும்.

அங்கு என்னைத் தலைகீழாகக்கட்டி எல். ரி. ரி. ஈ. யா? எனக் கேட்டு அடித்தனர். முதலில் இல்லை என்றேன். பின்பு ஆம் என்றேன். 1991 இல் இயக்கத்திலிருந்து 1994 இல் விலகிவிட்டேன். அதன் பின்பு இயக்கத்துடன் தொடர்பில்லை என்றேன்.

மறுநாள் (25-9-96) பிற்பகல் நாலரை மணியளவில் இராணுவம் இரண்டு பேரை நாமிருந்த இடத்துக்குக் கொண்டு வந்தது. அதில் ஒருவர் முரளிதரன்; மற்றவர் திருச்செல்வம் என அறிந்து கொண்டேன்.

அன்று ஐந்தரை மணியளவில் முரளிதரனை தலைகீழாகக் கட்டி, எல். ரி. ரி. ஈயா? எனக் கேட்டு நான்கு இராணுவத்தினர் பொல்லால் அடித்தனர். அவரின் வாயாலும் மூக்காலும் இரத்தம் வெளியேறியது.

பின்பு முரளிதரனை அவிழ்த்து விட்டுக் கால்களால் அவர் மீது ஏறி மிதித்தனர். அடிக்கும் போது அவர் குளறினார். மிதிக்கும் போது சத்தம் ஏதும் வெளிவரவில்லை.

பின்னர் அவருக்கு சாப்பாடு கொடுக்க முகத்தைத் திருப்பினர். முகம் இறந்தவரின் முகம் போலக் காணப்பட்டது

### எங்களை மாற்றின

இராணுவத்தினர் பலர் அங்கு வந்து பார்த்துக் கதைத்து விட்டு எங்கள் நான்கு பேரையும் பள்ளிக் கூடத்துக்குப் பின்புறமாகக் கொண்டு சென்றனர். அங்கு இரவு எங்களைத் தங்கவைத்தனர்.

மறுநாள் (26-9-96) காலை எமக்குத் தேநீர் தந்த இராணுவத்தினர் ''முரளிதரனை நேற்றிரவு எட்டுமணியளவில் 'பிளைற்றில்' கொழும்புக்கு அனுப்பியாச்சு! —என்றனர்.

எங்களை 27-9-96 அன்று மாலுசந்தியிலுள்ள முகாமுக்குக் கொண்டு சென்று இம் மாதம் முதலாம் (1-10-96) திகதி எனது தாயாரிடம் ஒப்படைத்தனர். முரளிதரனுக்கு என்ன நடந்தது எனத் தெரியாது--என்று கூறினர்.

### மனைவி சாட்சியம்

முரளிதரனின் மனைவி முரளிதரன் செல்வராணி தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:—

எனது கணவர் முரளிதரன், கட்டைவேலி, நெல்லியடி பனம் பொருள் சங்கத்தின் இலந்தைக்காடுகள் விற்பனை நிலையத்தில் விற்பனையாளராகக் கடமையாற்றி வந்தார்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி காலை 8 மணியளவில் அவர் வேலைக்குப் புறப்பட்டார் அதன் பின்பு அவர் வீட்டுக்கு வரவில்லை.

அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணியளவில் எனது கணவரை இராணுவம் பிடித்ததாக அறிந்தேன். உடனே சங்கத்துக்குச் சென்று முறையிட்டேன்.

சங்கத்தினர் இராணுவ முகாமுக்குச் சென்று திரும்பி வந்து விஜயரத்தினாவுடன் தொடர்பு கொண்டதாகவும் எனது கணவரை இராணுவத்தினர் விட்டுவிட்டதாக கேணல் கூறியதாகவும் சொன்னார்கள்.

பின்பு நெல்லியடி இராணுவ முகாமுக்குச் சென்று நான் விசாரித்த போது அவரை விட்டாயிற்று என்றனர்.

எனது கணவரை இராய் பிள்ளையார் கோயில் முகாமுக்கு கொண்டு சென்றதாக அறிந்து அங்கு போய்க் கேட்டபோது அங்கு இல்லை என்றனர் புலிகளில் அவர் இருக்கவில்லை என்றால் அவரை இராணுவம் விட்டிருக்கும் அல்லது விசாரணைக்கு பலாலிக்கு கொண்டு சென்றிருக்கும் என்றனர்

### காணவில்லை என்றனர்

ஆனால் கடந்த மாதம் 25 ஆம் திகதி எனது கணவரைத் தலைகீழாகக் கட்டிப்போட்டு இராணுவம் அடித்ததாகவும் பின்பு அவரைத் தாங்கள் காணவில்லை என்றும் அவருடன் இருந்த மூவர் எனக்குக் கூறினார்கள். அவர்கள் பெயர்கள் தெரியாது. அவர்களுக்கு எனது கணவரைத் தெரியும்.

அந்தத் தகவலின் பின்னர் கேணல் விஜயரத்னாவுடன் நான் தொடர்பு கொண்ட போது, அவர் பொலீஸில் முறையிடும்படி கூறினார்.

கடந்த 14 ஆம் திகதி பருத்தித்துறை பொலீஸாரிடம் நான் எனது கணவரைக் காணவில்லை என்பது குறித்து முறையிட்டேன்.

கடந்த 29 ஆம் திகதி (நேற்று முன்தினம்) எங்களை பொலீஸார் கூட்டிச் சென்று கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு அப்பால் விநாயகர் வித்தியாலய முகாமில் தேடிப்பார்த்து ஓர் இடத்தில் தோண்டுவித்த போது, துர்நாற்றம் வீசியது. ஆனால் அங்கு எதுவித தடயங்களும் கிடைக்கவில்லை.

எனது கணவரை இராணுவம் கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகப் படுகிறேன். - என்று சொன்னார்.

(அ-173)

---

## கரவெட்டியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதைகுழி தோண்டப்பட்ட போது உடுப்பிட்டி மரண விசாரணை அதிகாரி திரு. வி. நடராசா ஜே. பி., மந்திகை அரசினர் வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை ஆகியோரும் பொலீஸாரும் சமூகமளித்திருந்தனர்.

கரவெட்டி மேற்கு விநாயகர் வித்தியாலயத்துக்குச் சமீபமாக உள்ள ஓரிடத்தில் சுமார் ஆறடி ஆழத்துக்குப் புதைகுழி தோண்டப்பட்டது.

பருத்தித்துறைப் பொலீஸாரின் வேண்டுதலின் பேரில் குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் புதைகுழியைத் தோண்டி விசாரணை நடத்துமாறு —

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. பி. பாலச்சந்திரன் உடுப்பிட்டி மரண விசாரணை அதிகாரிக்கு உத்தரவிட்டிருந்தார்.

புதைகுழி தோண்டும் வேலைகள் நேற்று முன்தினம் (செவ்வாய்) சுமார் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகின.

அதன் தொடராக, நேற்று முற்பகல் மந்திகை ஆஸ்பத்திரியில் வைத்து மரண விசாரணை அதிகாரி விசாரணை நடத்தினார்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு வைத்திருந்த போது உடுப்பிட்டி கம்பர் மலையைச் சேர்ந்த தவராசா முரளிதரன் (23 வயது) என்பவர் மரணமானார் என்று சந்தேகிக்கப்பட்டே விசாரணை நடத்தப்பட்டது. த. முரளிதரன் ஒரு குழந்தையின் தந்தையாவார்.

அவரின் மனைவி முரளிதரன் செல்வராணி (19 வயது) முரளிதரனுடன் சேர்த்து இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் எனக் கூறப்படும் புறாப் பொறுக்கியைச் சேர்ந்த தம்பிராசா திருச்செல்வம் [24 வயது], கரவெட்டி மத்தியில் வசித்துவரும் சுந்தரலிங்கம் சுபதாஸ் [18 வயது] — வரணி வடக்கைச் சேர்ந்தவர், கரவெட்டி மேற்கு இராச கிராமத்தைச் சேர்ந்த தொழிலாளி கிட்டிணன் சிறிசிவா [16 வயது], கரவெட்டி பிராமணன் தோட்டத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை பாலசுப்பிரமணியம் [35 வயது] ஆகியோரின் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன.

நேற்றைய விசாரணை சுமார் மூன்று மணித்தியாலங்கள் நடைபெற்றன.

விசாரணைகள் தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிய வருகிறது. (உ-173)

---

## யாழ். மனித...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மல் போகும் சம்பவங்கள். பெண்கள் கடத்தப்பட்டு கற்பழிக்கப்படுதல் போன்ற சம்பவங்கள் குறித்து சுதந்திரமாக விசாரித்து அறிய மனித உரிமைகள் அமைப்புகளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதும் —

ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்குபற்றியோரின் முக்கிய கோரிக்கைகளாக இருந்தன.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலத்தில் காணாமல் போன 742 இளைஞர், யுவதிகளின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியலை யாழ். அரச அதிபர் அரசுக்கு சமர்ப்பித்துள்ளார் என்பதையும் பேரணியில் பங்குபற்றியோர் சுட்டிக்காட்டினர்.

பல்வேறுபட்ட மாதர் குழுக்கள், மனித உரிமை பணியாளர்கள் மற்றும் இவ்விடயத்தில் கரிசனை கொண்டோர் இப்பேரணியில் கலந்து கொண்டனர் (உ-3-10)

---

## பிரிட்டிஷ்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரிக்கு சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிவார்.

யாழ். செயலகத்தில் நடைபெறும் திணைக்களத் தலைவர்களின் கூட்டத்திலும் அவர் பங்குபற்றுவார்.

யாழ். பல்கலைக்கழகம் எதிர்நோக்கும் தேவைகள் குறித்து பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ பாலசுந்தரம்பிள்ளையும் —

மின்சாரத் தேவை குறித்து மின்சார சபை பிராந்திய முகாமையாளர் இராஜேந்திரனும் —

குடாநாட்டு புனர்வாழ்வுப் பணி பற்றி வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீராவும் — விளக்கவுள்ளனர்.

யாழ். மாவட்ட மின்சார விஸ்தரிப்புக்காக ஐந்து ஜெனரேட்டர்களை வழங்குவது குறித்தும் —

யாழ் ஆஸ்பத்திரிக்கு ''மேனின்'' நிறுவனம் மூலம் டாக்டர்களின் சேவையை வழங்குவது குறித்தும்— பிரிட்டிஷ் தூதுவர் நேரடியாக ஆராயவிருக்கிறார். (உ-3)

---

## ஜே. ஆர். —

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

அவர் நலம் பெற வேண்டி பிரார்த்தனைகளை மேற்கொள்ளும்படி ஐ. தே. கட்சி தனது எம். பிக்களையும் கிளைகளையும் கோரியுள்ளது. (உ-3)

## வருகை

இலங்கை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு மு. பாக்கியநாதன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

சில தினங்கள் இங்கு தங்கியிருந்து பனை அபிவிருத்திச் சபை தொடர்பான நடவடிக்கைகளில் இவர் ஈடுபடுவார். (அ-173)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 31-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org